**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்கும் - 2021**

**--------------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள், ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக் குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் ஆணைக் குழுவின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபை தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதாக என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அவ்வெளிப்படுத்துதல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது

அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 திகதியளவில் பெற வேண்டிய வருடாந்த ஒழுங்குறுத்தல் கட்டண மீதி ரூபா 82,544,592 காணப்பட்டதுடன், அதனுள் 2014/15 ஆண்டு முதல் இலங்கை மின்சார சபையில் இருந்து பெற வேண்டிய ரூபா 81,852,700 தொகையும் காணப்பட்டது. இந்த மீதியை அறவிடும் இயலுமை தொடர்பில் முறையான மதிப்பீடு ஒன்றினை மேற்கொண்டு அதற்குரிய ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கங்களை மேற்கொண்டமையால் நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்படும் பெறவேண்டிய மீதிகளின் நியாயமான பெறுமதி தொடர்பில் நிச்சயமற்ற | 2022 ஜனவரி 27 திகதிய PUCSL/Fin/2022/01 ஆம் இலக்க இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளருக்கு முகவரி இடப்பட்ட கடிதத்தின் மூலம் இத்தொகையை செலுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்தும் அத்தொகை செலுத்தப்படாதுவிடின் ஆணைக்குழுவினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

தன்மையை ஒன்று கணக்காய்வில் உருவாகியது. இதனால் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும் வருடாந்த ஒழுங்குறுத்துகை கட்டணம் பெறவேண்டிய மீதியில் நியாயமான பெறுமதி கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுச் சட்டம் | மின்சாரம், பெற்றோலியம் மற்றும் நீர் ஆகிய இலங்கையின் உட்கட்டமைப்பு வசதி கைத்தொழில்களை ஒழுங்குறுத்துவதற்காக 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுச் சட்டத்தின் மூலம் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவிற்கு அதிகாரம் அழிக்கப்பட்டிருந்தது. பெற்றோலியக் கைத்தொழில் மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புக் கைத்தொழில் மேற்பார்வை செய்வதற்குத் தேவையான சட்ட வரைபு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு 19 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்து இருந்தபோதிலும் கனியவள மற்றும் நீர் கைத்தொழில் ஆணைக்குழுவின் ஒழுங்குறுத்துகையின் கீழ் வரும் வகையில் உரிய அதிகார சட்டங்களை திருத்தி அமைக்க முடியாதிருந்தது. | நீர் சேவைகள் கைத்தொழிலின் ஒழுங்குறுத்துகை தேவைப்பாட்டுக்கு உரிய சட்ட பின்புலம் ஒன்றினை உருவாக்குவதற்கு 2003 ஆம் ஆண்டில் Water Service Reform அதிகார சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு 2009 ஜூலை 23 ஆம் திகதி சட்ட வரையுநர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதற்காக உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரைக்கு அமைய தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் 2017 மே 02 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த பணியானது மீள நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய சாட்சிகளை பெற்று மதியுரை அறிக்கை ஒன்றினை தயாரித்து அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு 2021 ஜூன் 25 ஆம் திகதி நீர் வளங்கள் அமைச்சிற்கு | கனிய வளங்கள் மற்றும் நீர் சார் கைத்தொழிலின் ஒழுங்குறுத்துகைக்கு உரிய சட்ட சட்டகம் ஒன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கையளிக்கப்பட்டுள்ளது. அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் சட்டத்தினை வரைபாக்குதல் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2018 ஜுலை 18ஆம் திகதி 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் I மற்றும் II ஆம் பந்திகள் | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிறுவன கட்டமைப்பு மற்றும் சம்பள கட்டமைப்பு தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணிகள் ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக நிதி அமைச்சரினால் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிறைவு வரையிலும் அப்பணிகளை மேற்கொள்ளாது பின்வருமாறு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| | | (i) நிறுவனத்தின் பதவியணிக்கு 11 கொடுப்பனவு வகைகளின் கீழ் ரூபாய்.45,873,483 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரச் சட்டத்தின் 12(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் அதன் பதவியணிக்கு மிகை ஊதியம் செலுத்தப்பட வேண்டிய வீதம் நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும் அதன் 3 ஆம் பிரிவின் மூலம் 12(1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் அல்லது அனைத்து விடயங்கள் தொடர்பிலும் ஆணைக்குழுவினால் விதிகள் ஒழுங்கமைக்க | தயாரிக்கப்பட்டுள்ள நிறுவன நிர்வாக மற்றும் செயல்வழிக் கோவைக்கு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முடியும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய ஆணைக்குழுவினால் குறித்த நிதி விதிகளை உள்ளடக்கிய கையேடு மற்றும் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில்இறுதி இணக்கப்பாடானது இந்த ஆணைக்குழு ஏனைய ஆணைக்குழுக்களுடன் ஒப்பிடும்போது விசேடமான நிறுவனம் ஒன்று என்பதும் இது உருவாக்கப்பட்டுள்ள சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கமைய ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமையால் அந்த அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நிலைமையானது பொருத்தமானது என்பதும் இந்த நேர்முக கலந்துரையாடலில் இடம்பெற்ற குறிப்புகள் முன்வைக்கப்பட்ட போதிலும் ஏனைய நிறுவனங்களும் முன்னுதாரணமாக பயன்படுத்தும் சந்தர்ப்பம் உள்ளமையால் குறித்த நேர்முக கலந்துரையாடலின் குறிப்புகளை வழங்க முடியாது என்பதாகும். | |
| (ii) | உதவிப் பணிப்பாளர் பதவிக்காக மாதாந்தம் ரூபா 40,000 படியாகவும் முகாமையாளர் பதவிக்கு மாதாந்தம் ரூபா 5,000 படியாகவும் | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | சாரதி பதவிக்காக மாதாந்தம் ரூபா 2,500 படியாகவும் பிரயாண செலவினத்தை செலுத்துவதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் செயல்வழி கோவையின் பிரகாரம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகளுக்கு திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது ரூபா 8,880,000 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (iii) | ஆணைக்குழுவில் சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்திர உத்தியோகத்தர்களுக்கு ஆகக்கூடியது ரூபா 5 மில்லியன் மற்றும் மீள் செலுத்தும் காலம் 5 வருடங்களின் கீழ் வாகன கடனுக்கான கடன் உத்தேச முறைமையொன்று 2018 மார்ச் 15 ஆம் திகதிய 212 ஆம் இலக்க ஆணைக்குழு பத்திரத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தேச முறைமைக்காக திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய மீளாய்வாண்டினுள் இரு உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 6,500,000 கூட்டுத்தொகையான | மேற்படி | மேற்படி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடன் தொகைக்காக வட்டியாக ரூபா.248,088 ஆணைக்குழுவினால் வங்கிக்கு மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. | | |
| | | (iv) ஆணைக்குழுவின் நிரந்தர ஊழியர்களுக்காக ரூபா 8 மில்லியன் ஆன உச்ச எல்லை மற்றும் 15 வருட காலப்பகுதிக்கு உள்ளடங்களாக வீடமைப்பு மற்றும் ஆதன முறைமை 2018 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 220 ஆம் இலக்க ஆணைக்குழுவின் பத்திரத்தின் ஊடாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய மீளாயவாண்டினுள் 18 உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 78,140,610 கூட்டுத்தொகையான வீடமைப்பு மற்றும் ஆதன கடன்களுக்கு ரூபா 3,157,723 தொகை வட்டியாக ஆணைக்குழுவினால் வங்கிக்கு மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (இ) | 2015 மே 25 ஆம் திகதிய PED - 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.3 | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க உத்தியோகபூர்வ வாகன உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு செலுத்தவேண்டிய | 2002 இன் 35 ஆம் இலக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகார சட்டத்தின் 12 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் | தயாரிக்கப்பட்டுள்ள தாபன நிர்வாக மற்றும் செயல்வழிக் கோவை திறைசேரிக்கு சமர்ப்பித்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் பந்தி | எரிபொருள் லிட்டர்களின் அளவிற்கு உரிய பெறுமதியை விஞ்சி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் எரிபொருள் படிகள் எழுதப்பட்டிருந்தன. | உத்தியோகத்தர்களின் பணிப்பொறுப்பினை கருத்திற்கொண்டு தேவையான எரிபொருள் எல்லைகளை ஆணைக்குழுவினால் அங்கீகரித்து அந்த அதிகாரத்தின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.3 ஆம் பந்தி | பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருந்த வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்வதற்கோ அந்த வாகனங்களின் எரிபொருளை பரிசோதித்தல் தொடர்பிலான குறிப்புகளோ பேணப்பட்டிருக்கவில்லை. | பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பயன்பாட்டில் உள்ள வாகனங்களின் எரிபொருள் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடு குறித்த சாரதியினால் இதுவரையிலும் சமர்பிக்கப்பட்டிராததுடன் அவற்றின் எரிபொருள் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும் இக் கணக்காய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை ஒன்றினை மேற்கொண்டு உரிய பதிவுகளை சம்பவக் குறிப்பு புத்தகங்களில் பதிவு செய்து குறிப்புகளை பேணுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 29,858 பெறுமதியான காலாவதியான 04 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் 2022 ஜூன் 27 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நான்கு காசோலைகள் தொடர்பில் நி.பி. 396(ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 141,703,508 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 146,775,974 தொகையாக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 5,072,466 இற்கான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானங்கள் 8 சதவீதத்தினால் குறைவடைந்தமை மற்றும் உசாத்துணைச் சேவை செலவுகள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் முறையே 393 சதவீதத்தினால் மற்றும் 99 சதவீதத்தினால் அதிகரித்தமை காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) செயல்நிமித்த உப கட்டுநிதி** | | |
| (i) பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு செலவிடப்பட்ட தொகையில் 62 சதவீதம் அல்லது ரூபா.58,485,262 தொகையானது 166 சந்தர்ப்பங்களில் 20 உத்தியோகத்தர்களுக்கும் 04 நிறுவனங்களுக்கும் செயல் நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. ஆணைக்குழுவின் நிதி மதியுரை கோவையின் பிரகாரம் ஒரு தடவையில் எந்தவொரு பணிக்காகவும் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஆகக்கூடியது ரூபா.20,000 ஆன செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கக்கூடிய போதிலும் ஆணைக்குழுவின் அலுவலகத்தினால் அந்த எல்லையினுள் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா.12,000 மற்றும் ரூபா.18,125 தொகையும், மற்றுமொரு உத்தியோகத்தருக்கு ரூபா.7,500 என்னுமாறு செயல் நிமித்து உபகட்டு நிதிகள் மூன்று மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. ஆணைக்குழுவின் நிதி மதியுரை கோவைக்கு முரணாக ஆணைக்குழுவின் அலுவலகத்தினால் 163 | இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் மக்களை அறிவுறுத்தும் பணி ஒன்று அல்ல என்பதுடன் அதிகார சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகள் சார்பாக சுயாதீனம் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் நிறைவேற்றும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் ஆகும். | ஆணைக்குழுவின் நிதி மதியுரை கையேட்டின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் 20 உத்தியோகத்தர்களுக்கு ரூபா.20,750 முதல் ரூபா.1,157,658 வரையிலான வீச்சில் செயல் நிமித்த உபகட்டுநிதகள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ii) | ஆணைக்குழுவின் முகாமைத்துவத்தினால் செயல் நிமித்த கட்டுநிதி வழங்கும்போது ஆணைக்குழுவின் நிதியானது தற்காலிகமாக மோசடி ஏற்படாத வகையில் வழங்கப்பட வேண்டும். எனினும் ஆணைக்குழுவின் அலுவலகத்தினால் உத்தியோகத்தர்களுக்கு அசாதாரணமான அளவுகளில் செயல் நிமித்த உபகட்டுநிதிகள் வழங்கப்பட்டு இருந்தமையால் அவ்வாறானதொரு கட்டுப்பாடு இடம் பெற்றிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை. அந்த 20 உத்தியோகத்தர்களில் 14 பேருக்கு ரூபா.1,261,693 தொகை அதிகரித்து செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட செயல் நிமித்த உபகட்டுநிதிகளில் 19 உத்தியோகத்தர்களால் ரூபா.5,682 முதல் ரூபா.1,543,864 ஆன வீச்சில் அந்த பணம் குறிப்பிட்ட காலப்பகுதியில் கையிருப்பில் வைக்கப்பட்டு மீண்டும் காசாக தீர்க்கப்பட்டிருந்தது. சரியான மதிப்பீடு ஒன்றின்றி உரிய பணிக்குரிய தொகையை விஞ்சி செயல் நிமித்த உபகட்டுநிதியை வழங்கியமையால் இவ்வாறு முற்பண பணி நிறைவடைந்த பின்னர் மீண்டும் காசாக வைப்பு செய்வதற்கு நேர்ந்திருந்தது. உரிய உத்தியோகத்தர்களினால் அந்த பணம் தற்காலிகமாக மோசடியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு போதிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலைமை நாட்டின் நிலைமை மற்றும் தூரமான பிரதேசங்களின் செயற்பாடுகள் காரணமாக இடம்பெற்றுள்ளது. எனினும் 2022 ஆம் ஆண்டில் இந்நிலைமை நிறைவேறாதிருக்க இதற்காக தயாரிக்கப்பட்ட புதிய சட்டம் உள்ளடங்கிய நிதி மதியுரைக்கோவை ஒன்று திருத்தப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அவதானிப்புகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய அங்கீகாரத்திற்கு ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நான்கு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த செயல் நிமித்த உபகட்டுநிதி தொகைகளில் ரூபா 677,279 கூட்டுத்தொகை 2022 மே 31 ஆம் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த பணத்தை நபர்களின் பெயருக்கு செலுத்தியிருந்த போதிலும் அவை அனைத்தும் நிறுவனத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான செலவினங்கள் ஏற்படாதிருக்க முற்பணக் கொடுப்பனவுகள் தொடர்பில் ஏற்பாடுகள் முறைமைப்படுத்தப்பட்டுள்ளது. | மேற்படி |
| (iv) | ஆணைக்குழுவின் நிதி அறிவுரைக் கோவை 12.8.3(b)(iii) பிரகாரம் பதவியணியின் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்படக் கூடிய போதிலும் அதற்கு முரணாக ஆணைக்குழுவின் அலுவலகத்தினால் ரூபா 3,601,090 தொகை 14 சந்தர்ப்பங்களில் 04 வெளிவாரி நிறுவனங்களுக்கு செயல் நிமித்த கட்டுநிதியாக வழங்கப்பட்டிருந்தது. ஒரு நிறுவனத்திற்கு இரு சந்தர்ப்பங்களில் செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 331,100 ஆன செலவினத்திற்கு ரூபா 413,200 ஆன செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய ஆணைக்குழுவின் ரூபா 82,097 ஆன நிதி வெளிவாரி தரப்பினரால் முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு இயலுமை காணப்பட்டது. | பல்வேறு சேவைகளுக்கு முற்பணமாக நிறுவனத்திற்கு நிறுவனத்திற்கு கிடைத்துள்ள அந்த உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகளை இறுதியாக தாமதமின்றி தீர்க்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (v) | ஆணைக்குழுவின் நிதி மதியுரை கோவையின் 12.8.3(b)(iv) பிரகாரம் செயல் நிதித்த உபகட்டுநிதி ஒன்றினை வழங்கும் பணி நிறைவடைந்து 03 நாட்களினுள் அந்த முற்பனங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. ஆணைக்குழுவினால் 15 | இந்நிலைமை நாட்டில் காணப்பட்ட சூழ்நிலை மற்றும் தூர பிரதேசங்களில் இடம்பெற்ற செயற்பாடுகள் காரணமாக இடம்பெற்றிருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாதிருக்க இது தொடர்பில் புதிய சட்டங்கள் | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 6,025,153 ஆன உப கட்டுநிதி 30 முதல் 270 நாட்கள் வரையான தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. | உள்ளடக்கப்பட்ட நிதி மதியுரை கோவை திருத்தப்பட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (vi) | உத்தியோகத்தர்களின் போக்குவரத்துச் செலவின பணிகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தின் சராசரி செலவினங்களுக்கான நடைமுறைகமைய மேற்கொள்ளபட வேண்டியதாக காணப்பட்ட போதிலும் அச்செலவினங்களும் அவசர கொடுப்பனவுகளாக கருதி செயல் நிமித்த உப கட்டுநிதியிலிருந்து திர்க்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்த மக்களை அறிவூட்டும் 09 நிகழ்ச்சி திட்டங்களுக்காக 10 உத்தியோகத்தர்கள் பங்குபற்றி இருந்ததுடன் அவர்களின் தங்கல் மற்றும் கூட்டிணைந்த படிகளாக ரூபா 1,809,050 தொகை செயல் நிமித்த உபகட்டுநிதிகளிலிருந்து தீர்க்கப்பட்டிருந்தது. | இப்பணம் நபர்களின் பெயருக்கு செலுத்தப்பட்டு இருந்தபோதிலும் எதிர்காலத்தில் இவ்வாறானதொரு செலவினம் ஏற்படாது இருப்பதற்கு முற்பண கொடுப்பனவுகள் தொடர்பிலான ஏற்பாடுகள் முறைமைப்படுத்தப்பட்டுள்ளது. | பதவியணிக்கு குறித்த செலவினங்களை பொதுவான கொடுப்பனவு நடைமுறைக்கமைய மேற்கொள்ள வேண்டும். |

**3.2 அரச பெறுகைகள் வழிகாட்டிகள் கோவையிலிருந்து விலகுதல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 டிசம்பர் 03 ஆம் திகதிய 260 இலக்க ஆணைக்குழுவின் கூட்ட அறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகை நடைமுறையை பின்பற்றி தலைவருக்காக வாகனமொன்று ரூபா.375,000 தொகையினை விஞ்சாத வகையில் பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த வாடகை வாகனத்தை பெற்றுக்கொள்வதற்கு 2021 டிசம்பர் 08 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் 3 அங்கத்தவர்கள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டிருந்தனர். 2021 டிசம்பர் 27 ஆம் திகதி பெறுகைகள் குழுவினால் விலைக் கேள்வி ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டிருந்தடன் அத்திகதி அந்த விலை கேள்வி ஆவணங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. வாடகை அடிப்படையில் வாகனம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக பெறுகைகள் அறிவித்தல் 2021 திசெம்பர் 28 ஆம் திகதி Daily News பத்திரிக்கையில் மாத்திரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இரு விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2022 ஜனவரி 11 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு விலைக்கேள்வி திறக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான விலைக்கேள்வியாளர் பங்குபற்றியிருக்கவில்லை. 2022 மே 18 ஆம் திகதி பெறுகைகள் குழுவினால் மாதாந்த வாகன வாடகை ரூபா 375,000 ஆக சமர்ப்பித்த விலைக்கேள்வியாளருக்கு ஒப்பந்தத்தை கையளிக்க தீர்மானித்திருந்தது. அதற்கமைய 2022 ஜூன் 08 ஆம் திகதி ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த | | |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் பிரகாரம் WP KB-2828 இலக்கம் உடைய Benz Mercedes CLS 350 வாகனம் பெற்றுக்கொள்ள இணங்கியிருந்தது.<br><br>இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) | கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரரின் நிறுவனத்தின் பதிவு இலக்கம் குறிப்பிடப்பட்டிராததுடன் அந்த கம்பெனியின் பணிப்பாளரும் கையொப்பமிட்டு இருந்த போதிலும் அவரின் பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிராமையால் உடன்படிக்கையின் செல்லுபடியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருப்திப்பட முடியாதிருந்தது. | இவ் உடன்படிக்கைக்குரிய தரப்பினரால் உரிய முறையில் தகவல் முன்வைக்கப்படாமையால் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தவில்லை. அதனால் ஆணைக்குழுவிற்கு நிதி ரீதியான நட்டம் ஒன்று ஏற்படவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கைகள் ரத்து செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரின் போக்குவரத்திற்காக 2021 திசெம்பர் 07 ஆந் திகதி முதல் 2022 யூன் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக ரூபா 375,000 ஆன சந்தை விலைக்கு 2005 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட wp KB-2828 ஆம் இலக்கமுடைய Benz Mercedes CLS 350 ரக வாகனம் நபரொருவரின் எரிபொருள் மற்றும் சாரதி இல்லாது மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது . மாதாந்த வாடகையாக 2021 திசெம்பர் 07 ஆந் திகதி முதல் 2022 மே 31 ஆந் திகதி வரையான | 2021 திசெம்பர் 03 ஆந் திகதி கூடிய ஆணைக்குழுவினால் 2021 திசெம்பர் 01 ஆந் திகதி ஒரு வருட காலத்திற்கு அதிகபட்ச விலை ரூபா 375,000 எனும் உச்ச விலையின் அடிப்படையில் வாகனத்தை வாடகைக்கு எடுக்க முடிவு எடுக்கப்பட்டிருந்தது.<br><br>விலை நிர்ணய முறையின் கீழ் வாகனம் ஒன்று வாடகைக்கு எடுக்கப்பட்டதுடன், மாதாந்த கட்டணமாக ரூபா 375,000 செலுத்துவதற்கு ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்ததுடன், மேற்படி கொடுப்பனவு பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டுதல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதிக்காக ரூபா 2,187,475 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதி அதிகாரங்களை சாட்டும் பதிவேட்டின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு உரிய அதிகாரம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட ரூபா 2,187,475 ஆன கொடுப்பனவுகளுக்கு ஆணைக்குழுவின் அதிகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | நி.பி.135 இன் கீழ் நிதி அதிகாரங்களை சாட்டுதலின் கீழ் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஈ) | மேற்குறிப்பிடப்பட்ட நிதி அதிகாரங்களை சாட்டும் பதிவேட்டின் பிரகாரம் வாகனங்களின் மாதாந்த வாடகையை செலுத்துதல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அவரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை. | மேற்படி | மேற்படி |
| (உ) | முறையான அதிகாரம் மற்றும் அங்கீகாரம் இன்றி மேற்குறிப்பிடப்பட்ட ரூபா.2,187,475 கூட்டுத் தொகையான கொடுப்பனவுகளுக்கு பணிப்பாளர்(மனித வளம் மற்றும் நிர்வாகம்) இனால் கொடுப்பனவுகள் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அந்த பரிந்துரைகளுக்கு அவரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் | | |

கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (i) | சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த wp KB-2828 இலக்கமுடைய wp KB-2828 ரக வாகனம் 2021 திசெம்பர் 07 ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 25 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு மற்றுமொரு நிறுவனத்திற்கு சொந்தமானதாக மோட்டார் வாகன திணைக்களத்தின் வாகன பதிவு சான்றிதழின் பிரகாரம் உறுதிப்படுத்தப்படுகிறது. அவ்வாறே 2022 ஜனவரி 26 ஆம் திகதி முதல் அந்த வாகனத்தின் உரித்து 2022 ஜூன் 08 ஆம் திகதி ஆணைக்குழுவினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட கம்பனிக்கு சாட்டப்பட்டிருந்தது. அதற்குரிய தகவல்கள் ஆணைக்குழுவிடம் உள்ள போது அந்த வாகனத்திற்காக வாகன உரித்து கம்பெனிக்கு செலுத்தாது வாகன உரித்தினை உறுதிப்படுத்தாத நபரொருவருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இவ்வாகனத்தினை விற்பனை செய்து தருமாறு முன்னாள் உரிமையாளரான கம்பெனியினால் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அத்துடன் 2021 டிசம்பர் 06 ஆம் திகதி வாகனத்தினை வாடகைக்கு வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வாகனம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. எனினும் இதன் சரியான உரித்தினை மோட்டார் வாகன பதிவு செய்யும் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | அரச பெறுகைககள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | அரசின் காசோலை ஒன்றினை திட்டவட்டமாக குறித்துரைக்கப்பட்ட | இதன் வரையுநரால் அவரின் பெயருக்கு காசாக அல்லது காசுக் காசோலையாக வழங்குமாறு கோரிக்கை | சிறு கட்டுநிதி நீங்கலாக ஏனைய அனைத்து கொடுப்பனவுகளும் பதிவேட்டுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | பெயர் ஒன்றிற்கு பெறுநரின் கணத்திற்கு மாத்திரம் என அடிக்குறிப்பிட்டு கொடுப்பனவு மேற்கொள்ளவேண்டிய போதிலும் இந்த வாகன வாடகை செலுத்தலுக்கு உரியதாக காசோலையாக எழுதி வாகனத்தின் உரிமை கம்பெனி அல்லாத கம்பெனியின் எழுத்துமூல அங்கீகாரமின்றி வேறொரு தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. கொடுப்பனவு உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலை இலக்கத்தின் கீழான செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 2,187,425 ஆகக் காணப்பட்ட போதிலும் வங்கி கூற்றின் பிரகாரம் அந்த காசோலைகளுக்கு உரியதாக ரூபா 3,061,165 செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய கொடுப்பனவு உறுதி சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலை பெறுமதியினை விஞ்சி ரூபா 873,739.87 செலுத்தப்பட்டிருந்தது. | விடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த தொகை காசாக செலுத்தப்பட்டுள்ளது. உண்மையான உரிமையாளருக்கு பணம் கிடைத்ததாக அவரால் வழங்கப்பட்ட பணம் பெற்றுக் கொண்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | உட்படுத்தப்பட்ட காசோலைகளின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (iii) | மாதாந்த வாகன வாடகைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த உறுதிச்சீட்டில் சேவை வழங்குனரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் உரிய தொகை, | இந்த பெறுநரகால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகளை சமர்ப்பிக்கும் நிபந்தனை இலக்கம் 6 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த Payment | சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் சரியான தன்மையை உறுதிப்படுத்தி பொறுப்புடன் செயல்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோருநரின் கையொப்பம் காணப்படவில்லை. அந்த பற்றுச்சீட்டு ஆணைக்குழுவின் அலுவலகத்தினால் கணினி மூலம் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த பற்றுச்சீட்டில் வாகன வாடகை செலுத்த வேண்டிய காலப்பகுதி மற்றும் கட்டணம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் காசுக் காசோலை ஒன்று குறுக்கு கோடிடப்படாது நபர் ஒருவருக்கு செலுத்துமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதில் யாரால் குறிப்பிட்ட கோரிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை கருத்திற் கொள்ளாது பணிப்பாளர் (மனித வழங்கள்) இனால் கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. | should be made in cash or favoring not crossed என்பதன் அடிப்படையில் காசாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (iv) | அரசாங்கத்திற்கு உரிய முறையில் சேவை நிறைவேற்றப்பட்டதாக அங்கீகரிக்கும் உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அச்சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னைய மாதத்தின் ஆரம்பத்தில் | கொடுப்பனவுகளுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | சேவையினைப் பெற்றுக் கொண்ட பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கமைய கொடுப்பனவுகளுக்கு முறையான அங்கீகாரம் இல்லாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (v) | 2022 ஜனவரி 07 ஆம் திகதிய 6577 கொடுப்பனவு உறுதி சீட்டின் மூலம் உரிய நபருக்கு 2022 ஜனவரி மாதத்திற்கு வாகன வாடகையாக ரூபா 375,000 செலுத்தப்பட்டிருந்தது. இக் கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டமை, பரிசோதிக்கப்பட்டமை, சான்றுபடுத்தப்பட்டமை, கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டமை மற்றும் அந்த பணத்தை பெற்றுக் கொண்டமை தொடர்பில் எவரும் கையொப்பமிட்டிருக்கவில்லை. அவ்வாறான கொடுப்பனவு உறுதி சீட்டொன்றின் மூலம் வழங்கப்பட்டிருந்த 716550 இலக்கமுடைய காசோலையின் ஊடாக வங்கியில் அந்த கொடுப்பனவு உறுதி சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியை ரூபா 98,440 இனால் விஞ்சி ரூபா 473,440 செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட சாரதி ஒருவர் இவ் வாகனத்தின் சாரதியாக செயற்படுகின்றமையால் இந் நிலைமை உருவாகியிருந்தது. நிறுவனத்தின் தேவைப்படின் பிரகாரம் அவர் செய்யப்படாத காரணத்தால் அவரின் ஒப்பந்த காலம் நிறைவடைந்ததும் நிறுவனத்திலிருந்து விலகிச் சென்றுள்ளார். | கொடுப்பனவுகள் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட வேண்டும். |
| (vi) | இதற்கமைய வாகனத்தின் தெளிவான உரிமையாளர் அல்லாத நபர் ஒருவருக்கு | இந்த கொடுப்பனவுகளை காசாக மேற்கொள்கின்றமையால் அத்திகதியில் உள்ளபடியாக ஏனைய கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி காசோலை வரையப்படும். அதனால் | மேற்படி |

முறையான அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது முறையான அங்கீகாரமின்றி குறித்த சேவையினை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் முறையான பற்றுச்சீட்டொன்று இல்லாது மனிதவள பணிப்பாளரினால் கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அப்பரிந்துரையினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஏனைய விடயங்கள் தொடர்பில் கருத்திற் கொள்ளாது நிதி பணிப்பாளரினால் கொடுப்பனவு உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலை பெறுமதியினை விஞ்சி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவு உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ரூபா 2,187,425 ஆக காணப்பட்ட போதிலும் ஆணைக்குழுவின் வங்கிக் கணக்கிலிருந்து ரூபா 3,061,165 செலுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு வேறுபாடு ஏற்பட்டுள்ளது. எனினும் இதற்குரிய உறுதிச்சீட்டின் மூலம் உரிய தொகை மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 05 செயற்பாடுகளின் எந்தவொரு செயன் முன்னேற்றமும் அடையப்பெற்றிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டினுள் தேவையான தரவுகளை உரிய முறையில் சமர்ப்பிக்காமையால் 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றுதல் சிரமத்திற்குள்ளானமை. | உரிய பணிகளை திட்டத்திற்கமைய மேற்கொள்ள வேண்டியமை. |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட்ட 74 செயற்பாடுகளில் 15 செயற்பாடுகளின் முன்னேற்றம் 30 சதவீதத்தை விட குறைவாக காணப்பட்டதுடன் அவற்றுள் 8 செயற்பாடுகளின் முன்னேற்றம் 10 சதவீதத்தை விட குறைவான பெறுமதியில் காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டினுள் தேவையான தரவுகளை உரிய முறையில் சமர்ப்பிக்காமையால் 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றுதல் சிரமத்திற்குள்ளானமை. | உரிய பணிகளை திட்டத்திற்கமைய மேற்கொள்ள வேண்டியமை. |
| (இ) | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் RA இலக்கத்தின் கீழ் இனம்காணப்பட்டிருந்த AP21/CP/RA/26, 27, 28, 31 மற்றும் 32 இற்குரிய செயன் முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அதற்கு பதிலாக புதிய பணிகளாக AP21/Pasindu/01, 02, 03, 04 மற்றும் 05 எனுமாறு 05 பணிகள் பெற்றோலிய பிரிவிற்கு உரியதாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. | இந்த அனைத்து பணிகளும் பெற்றோலியத்துறையுடன் இணைந்த செயற்பாடுகள் என்பதால் அவற்றை இனங்காணும் பொருட்டு இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது. அதற்கமைய இப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு உரிய செயன் முன்னேற்றம் ஆண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய பணிகள் திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஈ) | பொதுப் பயன்பாடுகள் அதிகார சட்டத்தின் 14(2) பிரிவின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பணிகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அப்பணிகளை | 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதி அமைச்சரவையின் தீர்மானத்தினை பின்னிணைப்பு இலக்கம் 2-A மற்றும் ஜனாதிபதி செயலகத்தினால் இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள 2022.06.27 ஆம் திகதிய | குறித்த பணிகள் திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

நிறைவேற்றுவதற்கு மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒட்டுமொத்த செயற்பாட்டு செலவினமான ரூபா 177,630,486 தொகையில் ரூபா 86,808,538 தொகை அதாவது 49 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே கடந்த வருடத்தைவிட ரூபா 74,976,422 அல்லது 633 சதவீதத்தினால் கிரயம் அதிகரித்திருந்தது.

PS/COS/COM/2022 இணைப்பின் 2-A-4 ஆம் இலக்க கடிதத்தின் அடிப்படையில் தொழில்நுட்ப கலைஞர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த நேர்ந்தமையால் 2020 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2021 ஆம் ஆண்டில் மேலதிக செலவினத்தை மேற்கொள்ள நேர்ந்திருந்தமையை குறிப்பிடுகிறேன்.